# கோவில்பட்டி நகராட்சி
## சாதாரண கூட்டம்

நிகழும் விகாரி வருடம் ஆவணி திங்கள் 13ம் நாள்.30–08–2019ம் தேதி வெள்ளிக் கிழமை காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் வைத்து சாதாரண கூட்டம் நடைபெறும்.

முன்னிலை:–திரு.எஸ்.கோவிந்தராஜன்,

கோவில்பட்டி நகராட்சி
நாள் . 26–08–2019

தனிஅலுவலர்
கோவில்பட்டி நகராட்சி

<table>
<tr><th>மன்ற கூட்ட தேதி</th><th>வரிசை எண் மற்றும் மன்றப்பொருள்</th><th>மன்றத் தீர்மானம்</th></tr>
<tr><td>30.08.2019</td><td>

<u>பொருள் எண்: 1</u>

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவிற்கு தேவையான கிருமிநாசினி பிளிச்சிங பவுடர் சப்ளை செய்ய 07.06.2019 தேதியில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. இதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

<table>
<tr><th>வ. எண்.</th><th>பெயர் மற்றும் முகவரி</th><th>தொகை</th></tr>
<tr><td>1.</td><td>The Thoothukudi District Cleaning Product producers service industrial Co-operative Society Ltd.,<br>28, Muthananthapuram 1st Street,<br>Kovilpatti.</td><td>1 Kg<br>Rs.46.50 + GST 18%</td></tr>
<tr><td>2.</td><td>The Chidambaranar Labour Contract Service Industrial Co-operative Society Ltd.,<br>18A/23A, Palayamkottai Road,<br>Thoothukudi – 628 002.</td><td>1 Kg<br>Rs.47.50 + GST 18%</td></tr>
</table>

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். செலவினத் தொகை மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

(அ) பொதுசுகாதார அவசர அவசியத்தை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதையும், குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த The Thoothukudi District Cleaning Product producers service industrial Co-operative Society Ltd., ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

ந.க.எண். 3313/2019/எச்1

</td><td>தீர்மான எண்.3697 அனுமதிக் கப் பட்டது.</td></tr>
<tr><td></td><td>

<u>பொருள் எண்: 2</u>

கோவில்பட்டி நகராட்சியில் பணிபுரியும் அனைத்து பிரிவு பணியாளர்கள் 128 நபர்களுக்கு 2018–19ஆம் ஆண்டு வருமானவரி தொகை கோவில்பட்டி நகராட்சி TAN No.MRIK00594G செலுத்தப்பட்டுள்ளது. மேற்காணும் தொகையினை நகராட்சி TAN No.MRIK00594Gலிருந்து சம்பந்தப்பட்ட பணியாளர்களின் PAN கணக்கில் செலுத்தி

</td><td>தீர்மான எண்.3698 அனுமதிக் கப் பட்டது.</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>படிவம் 24Q, Q4 தயார் செய்து மற்றும் பதிவிறக்கம் செய்த வகைக்கு ரூ.6610/–, நகராட்சி ஒப்பந்ததாரர்களிடம் பில்தொகை பிடித்தம் செய்யப்படும் GST Taxpayer filing charges (மே 2019) ரூ.3650/– மற்றும் நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனம் மாதவாடகையுடன் வசூல் செய்யப்படும் 18% GST TDS filing charges (மே 2019 மற்றும் ஜீன் 2019) ரூ.1000/– ஆகிய மூன்று பணி செய்த வகைக்கும், (ரூ.6610/–+ ரூ.3650/– + ரூ.1000/–) மொத்தம் ரூ.11260/–ஐ Relywin Tax Info Services, Kovilpatti என்ற நிறுவனத்திற்கு வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இனிவரும் காலஙகளில் நகராட்சி ஒப்பந்ததாரர்களிடம் பில்தொகை பிடித்தம் செய்யப்படும் GST மற்றும் நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனம் மாதவாடகையுடன் வசூல் செய்யப்படும் 18% GST தொகையினை Relywin Tax Info Services, Kovilpatti என்ற நிறுவனத்தின் மூலம் ஒவ்வொரு பிரதி மாதம் இணையதளம் மூலம் உரிய அரசு தலைப்பில் செலுத்தவும், அதற்கான செலவுத் தொகைக்கும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u>:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.4444/2019/சி1)</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td><u>பொருள் எண்: 3</u><br>இந்நகராட்சிக்கு சொந்தமான புதுரோடு நகராட்சி பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டிடத்தில் தளஓடு வசதி, மேலும் Smart Class room மாணவர்களின் அறிவுத்திறனை மேம்படுத்தும் பொருட்டு LCD Projector, கணினி, குளிர்சாதன வசதி செய்வதற்கு உத்தேச மதிப்பீட்டுச் செலவினம் ரூ.11.50 லட்சத்திற்கு மன்றத்தின் அஙகீகாரம் வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u>:- மன்றம் இப்பணியை கல்வி நிதியின் கீழ் செய்ய அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3552/2019/இ1)</td>
<td>தீர்மான எண்.3699 அனுமதிக் கப் பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td><u>பொருள் எண்: 4</u><br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 36 வரை உள்ள தெருவிளக்குகளை 01.04.2015 முதல் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு ஸ்ரீகஙகா எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனத்திற்கு கீழ்கண்ட விளக்குகளுக்கு வேலை உத்திரவு வழஙகப்பட்டுள்ளது.
<table>
<tr><td>1.</td><td>40 வாட்ஸ் குழல் விளக்குகள்</td><td>3084</td></tr>
<tr><td>2.</td><td>150 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள்</td><td>50</td></tr>
<tr><td>3.</td><td>150 வாட்ஸ் மெட்டல் ஹைலாய்டு விளக்குகள்</td><td>50</td></tr>
<tr><td>4.</td><td>70 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள்</td><td>23</td></tr>
<tr><td>5.</td><td>250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள்</td><td>186</td></tr>
<tr><td>6.</td><td>15 வாட்ஸ் சோலார் விளக்குகள்</td><td>25</td></tr>
<tr><td>7.</td><td>உயர்மின் கோபுர விளக்குகள் (400 வாட்ஸ் 20)</td><td>1</td></tr>
<tr><td></td><td></td><td>3419 எண்ணம்</td></tr>
</table>
மின்சேமிப்பினை கருத்தில் கொண்டு மேற்கண்ட விளக்குகளில் 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் 175 எண்ணம்</td>
<td>தீர்மான எண்.3700 அனுமதிக் கப் பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | 4x24w T5-CFC மின்சேமிப்பு விளக்குகளாக மாற்றப்பட்டுள்ளது. மேலும் நெடுஞ்சாலை துறையினரால் **38** எண்ணம் 75–4x24w CFC மின்சேமிப்பு விளக்குகள் பொருத்தப்பட்டு அவர்களின் பராமரிப்பு பணி காலம் முடிவுற்று நகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட **213** எண்ணம் 4x24w T5-CFC விளக்குகளை பராமரிப்பதற்கு ஸ்ரீகஙகா எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனம் திருநெல்வேலி அவர்களுக்கு மூன்று பகுதிகளாக வேலை உத்திரவு வழஙகப்பட்டுள்ளது. முதல் முறை **100** எண்ணஙகளுக்கு **01.12.2015** முதல் பராமரிப்பு பணி மேற்கொள்ள வேலை உத்தரவு வழஙகப்பட்டுள்ளது.<br>இரண்டாவது முறையாக 38 எண்ணஙகளுக்கு **15.05.2016** முதல் பராமரிப்பு பணி மேற்கொள்ள வேலை உத்தரவு வழஙகப்பட்டுள்ளது. மூன்றாவது முறையாக 75 எண்ணஙகளுக்கு **01.02.2017** முதல் பராமரிப்பு பணி மேற்கொள்ள வேலை உத்தரவு வழஙகப்பட்டுள்ளது. மேற்கண்ட வேலை உத்தரவுகளின்படி **213** எண்ணம் 4x24W T5 விளக்குகள் ஸ்ரீ கஙகா எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனம் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி பராமரிக்கப்பட்ட விளக்குகளுக்கான உரிய விலை விகிதம் இல்லாததால் **01.04.2017** முதல் **213** எண்ணம் 4x24W T5 விளக்குகள் பராமரிப்பதற்கான பட்டியல் தொகை வழஙகப்படாமல் உள்ளது. தெருவிளக்கு பராமரிப்பு அவசியம் கருதி 4x24w T5க்கு இணையான வாட்ஸ்க்கு வழஙகியுள்ள விலை விகிதத்தை வழஙக ஆணையாளர் அனுமதி வேண்டப்படுகிறது. அதன்படி **70w**க்கு வழஙகியுள்ள விலை விகிதத்தை (1223.85+ (1223.85x10%) = 1346.23 என்ற விலை விகிதம் ஒரு வருடத்திற்கு ஒரு எண்ணத்திற்கு வழஙக அதன்படி ஒரு எண்ணத்திற்கு ஒரு மாதத்திற்கு ரூ.**112.19/–** 213 எண்ணத்திற்கு **01.04.2017** முதல் **30.09.2019** வரை 30 மாதஙகளுக்கு வழஙகவும் அதற்கான உத்தேச மதிப்பீட்டுச் செலவினம் ரூ.**7.20** இலட்சத்திற்கு மன்றத்தின் அஙகீகாரம் வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.8732/2014/இ1)** | |
| | **<u>பொருள் எண்: 5</u>**<br>இந்நகராட்சி பராமரிப்பிலுள்ள வாகன எண்.TN69AV3622 புதிதாக வாஙகப்பட்டபோது AC வசதி இல்லாமல் வாஙகப்பட்டுள்ளது. எனவே, வாகனத்திற்கு AC வசதி செய்ய உத்தேச மதிப்பீட்டுச் செலவினம் ரூ.50,000/–க்கு மன்றத்தின் அஙகீகாரம் வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.1101/2018/இ1)** | தீர்மான எண்.**3701** அனுமதிக் கப் பட்டது. |
| | **<u>பொருள் எண்: 6</u>**<br>இந்நகராட்சிக்குட்பட்ட காந்திநகர் உயர்நிலை மற்றும் தொடக்கப்பள்ளியில் வர்ணம் பூச்சுபணி மற்றும் பொதுப்பணித்துறையின் மூலம் கட்டப்பட்ட கூடுதல் வகுப்பறை கட்டிடத்தில் அலமாரி வசதி, அஙகன்வாடி கட்டிடம் மேற்கூரை பணி செய்வதற்கு உத்தேச மதிப்பீட்டுச் செலவினம் ரூ.**25.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அஙகீகாரம் வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>:-** மன்றம் இப்பணியை கல்வி நிதியின் கீழ் செய்ய அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.3552/2019/இ1)** | தீர்மான எண்.**3702** அனுமதிக் கப் பட்டது. |

**<u>பொருள் எண்: 7</u>**

இந்நகராட்சி அலுவலகத்திற்கு தேவையான கிளினிங பொருட்கள் சப்ளை செய்வதற்கு 31.07.2019 தேதியில் விலைப்புள்ளி பெறப்பட்டது. இதில் கீழ்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண். | பெயர் மற்றும் முகவரி | |
|---|---|---|
| 1. | தூத்துக்குடி மாவட்டம் கிளினிங பொருட்கள் உற்பத்தியாளர்கள் சேவை மற்றும் தொழிற் கூட்டுறவு சஙகம் லிட்., கோவில்பட்டி. | ரூ.4896/– |
| 2. | திருநெல்வேலி மாவட்டம் ஒப்பந்த பணியாளர் சேவை தொழிற் கூட்டுறவு சஙகம் லிட்., திருநெல்வேலி. | ரூ.5010/– |
| 3. | அமிர்தா ஸ்ரீ டிரேடர்ஸ், கோவில்பட்டி | ரூ.4795/– |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்த அமிர்தா ஸ்ரீ டிரேடர்ஸ், கோவில்பட்டி விலைப்புள்ளியினை மன்ற அனுமதிக்காக வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

(அ) பொதுசுகாதார அவசர அவசியத்தை முன்னிட்டு விலைப்புள்ளி கோரியதையும், குறைவான விலைப்புள்ளி அளித்த அமிர்தா ஸ்ரீ டிரேடர்ஸ், கோவில்பட்டி விலைப்புள்ளியினை அஙகீகரிக்கலாம்.

(ந.க.எண். 4575/2019/எச்1)

தீர்மான எண்.3703 அனுமதிக் கப் பட்டது.

**<u>பொருள் எண்: 8</u>**

இந்நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக தினசரி சேகரமாகும் ஈரக்குப்பைகளை உரமாக்குவதற்காக திறன் உயிரி கரைசல் சப்ளை செய்வதற்கு 31.07.2019 தேதியில் விலைப்புள்ளி பெறப்பட்டது. இதில் கீழ்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண். | பெயர் மற்றும் முகவரி | 1 லிட்டருக்கு |
|---|---|---|
| 1. | தூத்துக்குடி மாவட்டம் கிளினிங பொருட்கள் உற்பத்தியாளர்கள் சேவை மற்றும் தொழிற் கூட்டுறவு சஙகம் லிட்., கோவில்பட்டி. | ரூ.80+18% GST |
| 2. | திருநெல்வேலி மாவட்டம் ஒப்பந்த பணியாளர் சேவை தொழிற் கூட்டுறவு சஙகம் லிட்., திருநெல்வேலி. | ரூ.120+18% GST |
| 3. | சிதம்பரனார் ஒப்பந்த பணியாளர் சேவை தொழிற் கூட்டுறவு சஙகம் லிட்., | ரூ.100+18% GST |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்த தூத்துக்குடி மாவட்டம் கிளினிங பொருட்கள் உற்பத்தியாளர்கள் சேவை மற்றும் தொழிற் கூட்டுறவு சஙகம் லிட்., கோவில்பட்டி விலைப்புள்ளியினைமன்ற அனுமதிக்காக வேண்டப்படுகிறது.

தீர்மான எண்.3704 அனுமதிக் கப் பட்டது.

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலக குறிப்பு</u>:-**<br>(அ) பொதுசுகாதார அவசர அவசியத்தை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதையும், குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த தூத்துக்குடி மாவட்டம் கிளினிங பொருட்கள் உற்பத்தியாளர்கள் சேவை மற்றும் தொழிற் கூட்டுறவு சங்கம்லிட்., கோவில்பட்டி விலைப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண். 4574/2019/எச்1 | |
| | **<u>பொருள் எண்: 9</u>**<br>கோவில்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பார்க் கிழக்கு தெருவில் செயல்பட்டு வரும் புதிய அலுவலக கட்டிடத்தில் நான்கு சக்கர வாகனஙகள் மற்றும் இருசக்கர வாகனஙகள் நிறுத்துவதற்கு தனித்தனியாக ஷெட் அமைப்பதற்கும் மற்றும் தேவையான கூடுதல் பணிகள் செய்வதற்கு உத்தேச மதிப்பீட்டுச் செலவினம் ரூ.25.00 லட்சத்திற்கு மன்றத்தின் அஙகீகாரம் வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>** மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3550/2019/இ1) | தீர்மான எண்.3705 அனுமதிக் கப் பட்டது. |
| | **<u>பொருள் எண்: 10</u>**<br>இந்நகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண்.21, சொக்கன் ஊரணி தெருவில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான கடை எண்.01, சக்கரைசாமி என்பவர் குத்தகைக்கு எடுத்து நடத்தி வருகிறார். அரசாணை (நிலை) எண். 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை (ந.நி.4) நாள்.03.07.2007ன்படி 9 வருடம் முடிவடைந்த அனைத்து கடைகளுக்கு 01.04.2017 முதல் வாடகை மறுநிர்ணயம் செய்யப்பட்டது. அப்போது 2017–2018 வருடம் ஏப்ரல் முதல் மார்ச் வரை ஒருமாத வாடகை ரூ.490/– GST ரூ.88/–ஆக மொத்தம் ரூ.578x12 = 6936/– பழைய வாடகையும் செலுத்தி உள்ளார். பின்பு புதிய வாடகை உயர்வு செய்யப்பட்டபோது அப்போதும் 2017–2018 வருடம் ஏப்ரல் முதல் மார்ச் வரை ஒருமாத வாடகை ரூ.2955/– GST ரூ.532/– ஆக மொத்தம் ரூ.3487 x 12 = 76714/– செலுத்தி உள்ளார். அதிகமாக செலுத்திய பழைய வாடகை தொகை ரூ.6936/–னை நிலுவை வாடகை தொகையில் ஈடு செய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>:-** மன்றம் அனுமதி வழஙகலாம்.<br>ந.க.எண். 2937/2018/அ3 | தீர்மான எண்.3706 அனுமதிக் கப் பட்டது. |

**<u>பொருள் எண்: 11</u>**

கோவில்பட்டி நகராட்சிக்கு சொந்தமான கடைகளுக்கு அரசாணை (நிலை) எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை (ந.நி.4) நாள். 03.07.2007ன்படி 9 வருடம் முடிவடைந்த அனைத்து கடைகளுக்கு 01.04.2017 முதல் வாடகை மறுநிர்ணயம் செய்யப்பட்டது. அப்போது தினசரி சந்தையில் மாடி கடைகளில் இரண்டு கடைகள் தவறாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம்.

| வ. எண். | ஒதுக் கீட்டு எண் | ஒதுக்கீட்டு பெயர் மற்றும் கடை எண் | வாடகை நிலுவை ரூ. | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | 137/75 | சி. இராமமூர்த்தி மாடி கடை எண்.02 | 16044 | இந்த குத்தகைதாரருக்கு மாடி கடையின் கீழ் 318, 378, 379 ஆகிய மூன்று கடைகள் மட்டும் உண்டு. மாடியில் 6 கடைகள் உள்ளது அதன் எண்.391 முதல் 396 வரை மட்டுமே. |
| 2. | 137/78 | ஆர்.கண்ணன் மாடி கடை எண்.4எ | 224551 | மாடியில் 6 கடைகள் உள்ளது அதன் எண். 391 முதல் 396 வரை மட்டுமே. |

எனவே இக்கேட்பை கணினியில் இருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**:- மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண். 2937/2019/அ3)

தீர்மான எண்.3707 அனுமதிக் கப் பட்டது.

**<u>பொருள் எண்: 12</u>**

கோவில்பட்டி நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தையில் கடை எண்.351, 352 ஆகிய கடைகள் சந்தை வியாபாரிகள் சஙகம் பயன்பாட்டில் இருந்து வந்தது. அக்கட்டிடம் 2017 வருடம் முதல் பளுதடைந்த நிலையில் இருந்து வந்ததாக தெரிவித்துள்ளனர். அதனால் அக்கட்டிடம் வாடகை வைப்பு தொகை எதுவும் செலுத்தப்படவில்லை. அவர்களே பழுதடைந்த கட்டிடம் பழுது பார்த்து ஏப்ரல்–2019 ல் பயன்பாட்டிற்கு வரப்பட்டுள்ளது. அக்கட்டிடத்திற்கு ஒதுக்கீட்டு எண் இல்லை. எனவே 12மாத வாடகை வைப்புத் தொகை மற்றும் கணினியில் ஒதுக்கீட்டு எண் ஏற்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**:- மன்றம் அனுமதி வழஙகலாம்.

ந.க.எண். 2937/2019/அ3

தீர்மான எண்.3708 அனுமதிக் கப் பட்டது.

**<u>பொருள் எண்: 13</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தை மற்றும் அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் ஆகியவற்றில் உள்ள கடைகளில் ஒரு வருடத்திற்கு மேலாக வாடகை நிலுவை உள்ள கடைகளுக்கு அறிவிப்பு கடிதம் சார்பு செய்யப்பட்டும் வாடகை செலுத்தாத கடைகளை வருவாய் அலுவலர், வருவாய் ஆய்வாளர் மற்றும் நகராட்சி பணியாளர்கள் காவல்துறையினர் முன்னிலையில் மார்ச் 2019 மாதம் பூட்டி சீல் வைக்கப்பட்டது. அப்போது கீழ்கண்ட கடைகள் மட்டும் வாடகை செலுத்தவில்லை அவை

தீர்மான எண்.3709 அனுமதிக் கப் பட்டது.

| வ. எண். | ஒதுக்கீட்டு எண் | ஒதுக்கீட்டு பெயர் மற்றும் கடை எண் | வருடம் | வாடகை மற்றும் சேவை வரியுடன் நிலுவை ரூ. | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1. | 137/BD01/ 00015 | சமுத்திரம் தினசரி சந்தை கடை எண்.236 | 2017–2018 Aprilto 2018-2019 March | 64848 | குத்தகைதாரர் செலுத்திய வைப்புத் தொகையிலிருந்து ஈடு செய்து கொள்ளலாம். |
| 2. | 137/ 1126 | அய்யாதுரை அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் திறந்தவெளி கடை எண்.01 | 2017–2018 Aprilto 2018-2019 March | 504300 | குத்தகைதாரர் செலுத்திய வைப்புத் தொகையிலிருந்து ஈடு செய்து கொள்ளலாம். |

மேற்கண்ட கடைகளுக்கு குத்தகைதாரர் செலுத்திய வைப்புத் தொகையிலிருந்து நிலுவை வாடகையை ஈடுசெய்து கொள்ளவும் பின்பு கணினி கேட்பு பதிவேட்டில் இருந்து நீக்கம் செய்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:- மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண். 2937/2018/அ3)

## <u>பொருள் எண்: 14</u>

தீர்மான எண்.3710 அனுமதிக் கப் பட்டது.

கோவில்பட்டி நகராட்சியில் பழைய மின்மோட்டார்கள் மற்றும் பம்புகள் 02.08.2009 அன்று ஏலமிடப்பட்டதில் 2 ஏலதாரர்கள் கலந்துகொண்டு கீழ்க்கண்டவாறு அதிகபட்ச ஏலக்கேள்வித் தொகை கேட்டுள்ளனர்.

| வ.எண். | ஏலதாரர் பெயர் | ஏலதாரர் அதிகபட்சமாக கேட்டுள்ளத் தொகை ரூ. / கிலோ |
|---|---|---|
| 1. | பி. மாரிமுத்து | ரூ. 14.00 / கிலோ |
| 2. | எஸ். கருப்பசாமி | ரூ. 13.50 / கிலோ |

மேற்கண்ட விபரப்படி திரு.பி.மாரிமுத்து என்பவர் அதிகபட்சமாக ரூ.14.00/ கிலோ ஏலக்கேள்வியினை கேட்டுள்ளார். எனவே, அதிகபட்ச ஏலக்கேள்வி கேட்டுள்ள திரு.பி.மாரிமுத்து அவர்களின் ஏலத்தொகை ஏற்க மன்றத்தின் அஙகீகாரம் வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மின்பொருட்கள் மற்றும் பம்புகளை எடுத்துச்செல்ல 06.08.2019ல் இந்நகராட்சி ஆணையாளர் (கூ/பொ) அவர்களின் முன்அனுமதி பெற்று நிபந்தனைகளுடன் வேலை உத்திரவு வழஙகியதையும் மன்றம் அஙகீகரிக்கலாம்.

(ந.க.எண்.998/2016/இ1)

## <u>பொருள் எண்: 15</u>

தீர்மான எண்.3711 அனுமதிக் கப் பட்டது.

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வந்த புதிய (TATA ACE GOLD) 9 வாகனம் ஃபீரி வாட்டர்

சர்வீஸ் மற்றும் டீசல் பில்டர், ஆயில் பில்டர் மற்றும் புதிதாக இன்ஜின் ஆயில் மாற்றுதல் ஹைட்ராலிக் ஆயில் குறைவாக உள்ள வாகனத்தில் நிரப்புதல் மற்றும் பழுது நீக்கம் செய்தல் உத்தேச செலவினத் தொகை ரூ.25,000/—க்கு மன்ற அனுமதிக்காக வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 4307/2019/எச்1

.

**பொருள் எண்: 16**

கோவில்பட்டி நகராட்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஓராண்டுக்கு முன்னர் முடிக்கப்பட்ட பணிகளை முதல் கட்டமாக நகராட்சி வசம் ஒப்படைத்து நகராட்சி மூலம் பராமரித்து கொள்ளுமாறு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், செயற்பொறியாளர் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே முடிவுற்ற திட்டப்பணிகளை நகராட்சி மூலம் தினமும் 10 பணியாளர்களை கொண்டு ஒருவருட காலத்திற்கு இயக்குவதற்கு உத்தேச மதிப்பீட்டுச் செலவினம் ரூ.20.00/—இலட்சத்திற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் இப்பணியை குடிநீர் நிதியின் கீழ் செய்ய அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3552/2019/இ1)

தீர்மான எண்.3712 அனுமதிக் கப் பட்டது.
.

**பொருள் எண்: 17**

கோவில்பட்டி நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தையில் கடை எண்.355ற்கு 30.07.2019ம் தேதியில் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளி கேள்வியில் யாரும் கலந்து கொள்ள வில்லை மற்றும் பொதுஏலம் நடைபெற்றதில் கீழ்காணும் நபர் கலந்து கொண்டு ஏலம் கோரியுள்ளார்.

| வ. எண். | ஏலதாரர் பெயர் | பொது ஏல கேள்வி தொகை ரூ. | ஒப்பந்தப்பு கேள்வி தொ |
|---|---|---|---|
| 1. | திரு.பி. சீனிபாண்டியன்<br>கோவில்பட்டி<br>தூத்துக்குடி. | 1,800 | —— |

மேற்காணும் விபரப்படி திரு.பி.சீனிபாண்டியன் என்பவர் உயர்ந்தபட்ச பொதுஏலம் கோரியுள்ளார். எனவே உயர்ந்தபட்ச மாதவாடகை தொகை ரூ.1800/—க்கு தினசரி சந்தையில் கடை எண்.355யை வைப்புத் தொகை செலுத்திய பின் மூன்றாண்டு காலத்திற்கு குத்தகை இன பொதுஏலம் நிபந்தனைகளின்படி நடத்தி கொள்ளும் உரிமம் ஒப்படைப்பு செய்வதற்கு மன்றம் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 7850/2015/அ3)

தீர்மான எண்.3713 அனுமதிக் கப் பட்டது.

**பொருள் எண்: 18**

இந்நகராட்சி கணினி மற்றும் பிரிண்டர்களுக்கு வருடாந்திர பராமரிப்பு பணிக்கு 08.08.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

தீர்மான எண்.3714 அனுமதிக் கப் பட்டது.

<table>
<tr><td></td><td>

| | |
|---|---|
| 1.Sojurner Computers, Kovilpatti. | 1,13,700/- அதிகம் (GST extra) |
| 2.Thomsan Electronics Computers | 1,23,300/- (GST extra) |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள Sojourner Computers, Kovilpatti என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.<br>
<u>**அலுவலக குறிப்பு**</u>:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.5444/2016/இ1)</td><td></td></tr>
<tr><td></td><td><u>**பொருள் எண்: 19**</u><br>
கோவில்பட்டி நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தையில் கடை எண்.109க்கு வரிவிதிப்பு எண்.137/1565 குத்தகை உரிமம் பெயர் திரு.அந்தோணிசாமி என்ற பெயரில் உள்ளது. குத்தகை உரிமதாரர் திரு.அந்தோணிசாமி என்பவரும் தொழில் நடத்தி வந்தார். தற்போது திரு.அந்தோணிசாமி என்பவர் இறந்துவிட்டார். அன்னாரின் மகன் திரு.சரவணன் அவர்களுக்கு கடையை ஒப்படைக்க சம்மத பத்திரமும் கடிதமும் சமர்ப்பித்துள்ளார். அதன்பொருட்டு பரிசீலனை செய்யப்பட்டதில், அரசு ஆணை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கல் துறை அரசாணை (நிலை) எண்.92, நாள். 03.07.2007ல் தெரிவித்துள்ளவாறு பெயர் மாறுதல் கட்டணம் நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டு இரசீது நகல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே அரசு ஆணையில் தெரிவித்துள்ள விதிகளின்படி குத்தகை உரிமம் திரு.அந்தோணிசாமி என்ற பெயரிலிருந்து திரு.சரவணன் என்ற பெயருக்கு மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>**அலுவலக குறிப்பு**</u>:- மன்றம் அனுமதி வழஙகலாம்.<br>
(ந.க.எண். 1122/2019/அ3)</td><td>தீர்மான எண்.3715 அனுமதிக் கப் பட்டது.</td></tr>
<tr><td></td><td><u>**பொருள் எண்: 20**</u><br>
இந்நகராட்சிக்கு வரப்பெறும் புதிய சொத்துவரி, தொழில்வரி, புதிய குடிநீர் குழாய் இணைப்பு மற்றும் இதர இனஙகளுக்கான விண்ணபபஙகளை கணினியில் பதிவு செய்வதற்கு, ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும், விண்ணப்ப பதிவு கட்டணமாக ரூ.10/–வீதம் 01.09.2019 முதல் வசூல் செய்துகொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>**அலுவலக குறிப்பு :-**</u> மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண். 4503/2019/சி1)</td><td>தீர்மான எண்.3716 அனுமதிக் கப் பட்டது.</td></tr>
<tr><td></td><td><u>**பொருள் எண்: 21**</u><br>
இந்நகராட்சி உடன்நிகழ் தணிக்கைத் துறை மற்றும் இதர பிரிவுகளுக்குத் தேவையான கோப்புகள் வைக்கக்கூடிய ஸ்டீல் ரேக் 20 எண்ணமும், ஸ்டீல் பீரோ 2 எண்ணமும் டான்ஸி நிறுவனம் மதுரையில் வாஙகுவதற்கு அதற்கான உத்தேச செலவினம் ரூ.3,00,000/– (ரூபாய் மூன்று லட்சம்) இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>**அலுவலக குறிப்பு**</u>:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண். 4507/2019/இ1)</td><td>தீர்மான எண்.3717 அனுமதிக் கப் பட்டது.</td></tr>
</table>

**<u>பொருள் எண்: 22</u>**

இந்நகராட்சியில் தினசரி கணினி வரிவசூல் மையத்தில் வசூலாகக்கூடிய பணத்தை வைத்து பூட்டக்கூடிய பாதுகாப்பு பெட்டகம் வாங்கி பல ஆண்டுகளுக்கு மேலாகிறது. இதில் ஒரு சாவி கொண்டு மட்டுமே பூட்டப்பட்டு வருகிறது. எனவே இரண்டு சாவி கொண்டு பூட்டக்கூடிய பாதுகாப்பு பெட்டகம் 1 எண்ணமும் பணம் எண்ணக்கூடிய மிஷின் 2 எண்ணமும் வாங்குவதற்கு அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,50,000/– (ரூபாய் ஒரு இலட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:-** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 4506/2019/பி2)

தீர்மான எண்.3718 அனுமதிக் கப் பட்டது.

**<u>பொருள் எண்: 23</u>**

இந்திய திருநாட்டின் 73வது சுதந்திரதின விழாவை முன்னிட்டு இந்நகராட்சி அலுவலக வளாகத்தில் 15.08.2019 வியாழக்கிழமை அன்று நடைபெறவுள்ள தேசிய கொடியேற்றி கொடிக்கு மரியாதை செலுத்தும் விழா மற்றும் கலைநிகழ்ச்சிக்கும் உத்தேச செலவு தொகை ரூ.25,000/–க்கு பொதுநிதியிலிருந்து பயன்படுத்தி கொள்ளவும் மன்றம் அனுமதிக்காக வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:-** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1144/2018/எச்1)

தீர்மான எண்.3719 அனுமதிக் கப் பட்டது.

**<u>பொருள் எண்: 24</u>**

இந்நகராட்சிக்கு தேவையான பாதுகாப்பு பெட்டகம் மற்றும் பணம் எண்ணக்கூடிய மிஷின் ஆகியவற்றிற்கு 13.08.2019 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றவிலைப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | பொருள் ஒன்றிற்கான விலை விகிதம் | |
|---|---|---|---|
| | | பாதுகாப்பு பெட்டகம் பொருள் (Godrej Safety Locker Model Presidio 110) | பணம் எண்ணக்கூடிய மிஷின் (Mixed Value Cash Counting Machine Model: Banko 20) |
| 1. | மேலகரம், பிரிண்டிங பணியாளர்கள், தொழிற்கூட்டுறவு சங்கம், தென்காசி. | ரூ.56,000/– (GST Extra) | ரூ.17,600/– (GST Extra) |
| 2. | திருநெல்வேலி மாவட்ட ஒப்பந்த தொழிலாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவு சங்கம், திருநெல்வேலி. | ரூ.55,500/– (GST Extra) | ரூ.17,000/– (GST Extra) |
| 3. | சிதம்பரனார் ஒப்பந்த தொழிலாளர், சேவை தொழிற் கூட்டுறவு சங்கம், தூத்துக்குடி. | ரூ.55,000/– (GST Extra) | ரூ.16,500/– (GST Extra) |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் சிதம்பரனார் ஒப்பந்த தொழிலாளர் சேவை தொழிற்கூட்டுறவு சங்கம், தூத்துக்குடி கொடுத்துள்ள விலைப்புள்ளி குறைவாக இருப்பதால், அதனை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:-** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.4506/2019/பி2)

தீர்மான எண்.3720 அனுமதிக் கப் பட்டது.

**பொருள் எண்: 25**

இந்நகராட்சிக்கு 2019–2020ம் ஆண்டிற்குத் தேவையான எழுதுபொருட்கள், படிவஙகள், பதிவேடுகள், கணினி ரசீதுகள் மற்றும் பிரிண்டருக்குத் தேவையான டோனர்கள் ஆகியவை வாஙகுவதற்கு 16.08.2019ம் தேதி விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விவரப்படி கூட்டுறவு நிறுவனஙகளிடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பொருட்கள் விவரம் | அளவு (Quantity) | தூத்துக்குடி மாவட்ட ஹைடெக் பிரிண்டிங கூட்டுறவு நிறுவனம், கோவில்பட்டி (GST Extra) ரூ. | கோவில்பட்டி சிறுதொழில் தொழிற் கூட்டுறவு சேவை சஙகம், கோவில்பட்டி (GST Extra) ரூ. | திருநெல்வேலி மாவட்ட Multi purpose தொழிற் கூட்டுறவு சேவை சஙகம், திருநெல்வேலி (GST Extra) ரூ. | சிதம்பரனார் ஒப்பந்த தொழிலாளர் சேவை தொழிற் கூட்டுறவு சஙகம், தூத்துக்குடி (GST Extra) ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1. | A4 காஙகர் பேப்பர் (Green Paper) | 1 ரீம் | 800 | 760 | 740 | 735 |
| 2. | டெஙகு அபராத கட்டண ரசீது புக் | 1 | 250 | 240 | 220 | 210 |
| 3. | பிளாஸ்டிக் அபராத கட்டண ரசீது புக் | 1 | 250 | 240 | 220 | 210 |
| 4. | திடக்கழிவு மேலாண்மை அபராத ரசீது புக் | 1 | 250 | 240 | 220 | 165 |
| 5. | டெஙகு காய்ச்சல் கண்டவர்கள் பற்றிய விவரஙகள் குறிப்பேடு | 1 | 930 | 920 | 890 | 865 |
| 6. | MDR பதிவேடு 50 பக்கம் | 1 | 580 | 570 | 550 | 545 |
| 7. | ஏல பதிவேடு 50 பக்கம் | 1 | 200 | 210 | 190 | 180 |
| 8 | ஒப்பந்தப்புள்ளி பதிவேடு | 1 | 320 | 310 | 295 | 285 |
| 9. | டெஙகு மேற்பார்வையாளர்கள் பதிவேடு 50 பக்கம் | 1 | 160 | 150 | 135 | 125 |
| 10. | டெஙகு Identify பதிவேடு | 1 | 170 | 190 | 160 | 155 |
| 11. | சம்பள பதிவேடு | 1 | 620 | 630 | 580 | 575 |
| 12. | வழக்கு பதிவேடு | 1 | 390 | 380 | 350 | 280 |
| 13. | ஊதிய உயர்வு பதிவேடு | 1 | 390 | 380 | 350 | 340 |
| 14. | மன்ற தீர்மான பதிவேடு | 1 | 1450 | 1430 | 1390 | 1350 |
| 15. | Stock Register | 1 | 330 | 320 | 295 | 285 |
| 16. | தற்செயல் விடுப்பு பதிவேடு 50 பக்கம் | 1 | 250 | 700 | 190 | 185 |
| 17. | வைப்புத் தொகை பதிவேடு | 1 | 720 | 700 | 690 | 680 |
| 18. | பிறப்பு அறிக்கை பதிவேடு | 100 Nos | 660 | 670 | 630 | 625 |
| 19. | இறப்பு அறிக்கை பதிவேடு | 100 Nos | 660 | 670 | 630 | 625 |
| 20. | இறந்து பிறந்தவை அறிக்கை | 100 Nos | 890 | 920 | 850 | 840 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 21. | ரைட்டிஙபேடு சன்மைக்கா | 1 | 300 | 310 | 280 | 275 |
| 22. | Chitta Register | 1 | 800 | 810 | 780 | 775 |
| 23. | கம் பாட்டில் (பெரியது) | 1 | 140 | 150 | 130 | 128 |
| 24. | அலுவலக முன்பண பதிவேடு | 1 | 320 | 330 | 295 | 290 |
| 25. | LIR பதிவேடு | 1 | 320 | 330 | 295 | 290 |
| 26. | TVS PRINTER GATRIAGE | 1 | 490 | 500 | 450 | 445 |
| 27. | 12A Toner | 1 | 7200 | 7150 | 6800 | 6790 |
| 28. | RICHO XEROX TONER | 1 | 4300 | 4150 | 3900 | 3850 |
| 29. | A4 Size paper | 1 | 260 | 250 | 235 | 232 |
| 30. | FS Size Paper Legal | 1 | 320 | 330 | 290 | 283 |
| 31. | Demand Notice | 1000Nos | 1750 | 1740 | 1680 | 1675 |
| 32. | Sanitary Worker Attendance Register | 1 | 380 | 390 | 360 | 355 |
| 33. | கட்டிட அனுமதி மறுப்பு உத்தரவு படிவம் (100பக்கம் கொண்டது) | 1 புக் | 490 | 500 | 460 | 430 |
| 34. | ஒப்புதல் அட்டை | 100Nos | 370 | 365 | 350 | 340 |
| 35. | அனுமதியின்றி கட்டப்படும் / கட்டப்பட்ட கட்டிடத்தை பொறுத்து நோட்டீஸ் (1+1) | 1 புக் | 480 | 475 | 460 | 450 |
| 36. | ஆக்கிரமிப்பு அறிவிப்பு நோட்டீஸ் (1+1) | 1 புக் | 475 | 475 | 460 | 450 |
| 37. | பென்சில் பாக்ஸ் | 1 | 85 | 95 | 80 | 75 |
| 38. | துணிகவர் ( SR புக் சைஸ்) | 1 | 29 | 27 | 24 | 22 |
| 39. | தபால் பேடு (புல்கவர்) | 1 | 150 | 160 | 140 | 135 |
| 40. | கத்தரிகோல் (பெரியது) | 1 | 240 | 238 | 230 | 220 |
| 41. | Cheque Register | 1 | 280 | 270 | 260 | 255 |
| 42. | CD with Cover 1 Time | 100Nos | 1920 | 1940 | 1900 | 1880 |
| 43. | Stamp Pad Big | 1 | 135 | 133 | 130 | 125 |
| 44. | Stamp Pad Small | 1 | 95 | 100 | 90 | 85 |
| 45. | Stamp Pad Ink | 1 | 125 | 127 | 120 | 115 |
| 46. | File Pad (Special) | 1 | 42 | 41 | 40 | 39 |
| 47. | Wrapper Sheet | 100Nos | 555 | 545 | 530 | 525 |
| 48. | குண்டூசி | 1 Box | 49 | 53 | 45 | 42 |
| 49. | முப்பட்டை ஊசி | 1 | 9 | 9 | 8 | 7 |
| 50. | ப்ளாப் (கலர்) | 1 | 39 | 42 | 35 | 32 |
| 51. | ஆடிட் பென்சில் | 1 Box | 100 | 105 | 95 | 90 |
| 52. | STAPLAR Pin Box (20 Nos) Small | 1 | 275 | 290 | 260 | 250 |
| 53. | STAPLAR Pin Box (10 Nos) Big | 1 | 930 | 950 | 860 | 855 |
| 54. | STAPLAR Pin MACHNE Small | 1 | 80 | 95 | 80 | 75 |
| 55. | STAPLAR Pin MACHNE Big | 1 | 250 | 240 | 220 | 215 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 56. | EAESAR Box | 1 | 118 | 125 | 115 | 110 |
| 57. | STEEL SCALE | 1 | 55 | 53 | 50 | 47 |
| 58. | 1Q Ruled Long Size Note | 1 | 130 | 132 | 125 | 120 |
| 59. | 2Q Ruled Long Size Note | 1 | 260 | 250 | 240 | 235 |
| 60 | D & O படிவம் | 1 புக் | 340 | 350 | 330 | 325 |
| 61. | Form 4 / 4A | 1 புக் | 340 | 350 | 330 | 325 |
| 62. | MCF 105 செல்லான் ரிஜிஸ்டர் | 1 | 970 | 965 | 950 | 945 |
| 63. | M.L. Register | 1 | 350 | 360 | 340 | 335 |
| 64 | Stores Priced Ledger | 1 | 400 | 405 | 390 | 385 |
| 65. | Asset Register | 1 | 400 | 405 | 390 | 385 |
| 66. | P.F. Abstract Register | 1 | – | 1680 | 1650 | 1630 |
| 67. | Property Tax Demand 5 Years Lether Bind | 1 | 2930 | 3000 | 2900 | 2850 |
| 68. | Mutation Register | 1 | 1920 | 1900 | 1850 | 1840 |
| 69. | டின்டாக் | 1 கட்டு | 20 | 19 | 18 | 17 |
| 70. | P.F. Cash Book | 1 | 400 | 405 | 390 | 385 |
| 71. | T.A Bill ( 4 Page) | 100Nos | 980 | 1000 | 940 | 930 |
| 72. | முன்பணப்பதிவேடு | 1 | 370 | 380 | 350 | 340 |
| 73. | இட்லி டோக்கன் (1200 ரசீதுகள்) | 1 புக் | 200 | 220 | 190 | 188 |
| 74. | சாம்பார் சாதம் டோக்கன் (300 ரசீதுகள்) | 1 புக் | 60 | 70 | 50 | 48 |
| 75. | தயிர் சாதம் டோக்கன் (300 ரசீதுகள்) | 1 புக் | 60 | 70 | 50 | 48 |
| 76. | கணினி வரி ரசீது (With Carbon 1+1) | 1000 ரசீதுகள் | 3300 | 3450 | 2950 | 2945 |
| 77. | வருகை பதிவேடு | 1 | 190 | 170 | 160 | 155 |
| 78. | M.Book 25 Page | 1 | 90 | 80 | 70 | 68 |
| 79. | M.Book 50 Page | 1 | 100 | 95 | 90 | 85 |
| 80. | M.Book 100 Page | 1 | 130 | 125 | 120 | 115 |
| 81. | Project Ledger | 1 | 400 | 405 | 390 | 385 |
| 82. | Tabal Cover (Big) | 1000Nos | 2950 | 2880 | 2800 | 2750 |
| 83. | Tabal Cover (Small) | 1000Nos | 2000 | 1990 | 1950 | 1940 |
| 84. | Arrear Demand Register 1 Years | 1 | 990 | 1000 | 950 | 945 |
| 85. | Personal Register 100 Page | 1 | 370 | 375 | 360 | 355 |
| 86. | Personal Register 50 Page | 1 | 290 | 280 | 260 | 255 |
| 87. | Log Book 200 Page | 1 | 335 | 340 | 325 | 320 |
| 88. | Log Book Small | 1 | 190 | 195 | 180 | 170 |
| 89 | Running Note | 1 | 190 | 195 | 180 | 170 |
| 90. | Reminder Diary | 1 | 190 | 195 | 180 | 170 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 91. | பிறப்பு சான்று கோரும் விண்ணப்பம் (100 Nos) | 1 புக் | 300 | 295 | 290 | 285 |
| 92. | இறப்பு சான்று கோரும் விண்ணப்பம் (100 Nos) | 1 புக் | 300 | 295 | 290 | 285 |
| 93. | Despatch Register | 1 | 300 | 295 | 290 | 285 |
| 94. | DR (Tapal) | 1 | 300 | 295 | 290 | 285 |
| 95. | Tender Register | 1 | 300 | 295 | 290 | 285 |
| 96. | சாலையோர கட்டண வசூல் ரசீது புத்தகம் (ஒரு புத்தகம் 100 எண்ணம் கொண்டது) | –– | –– | –– | –– | 30 |
| 97. | புதிய குடிநீர் குழாய் இணைப்பு விண்ணப்ப படிவம் (100 Nos) | 1 புக் | –– | –– | –– | 285 |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் சிதம்பரனார் ஒப்பந்த தொழிலாளர் சேவை தொழிற்கூட்டுறவு சங்கம், தூத்துக்குடி கொடுத்துள்ள விலைப்புள்ளி குறைவாக இருப்பதால் அதனை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:- மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 4576 /2019/பி2) தீர்மான எண்.3721

அனுமதிக்கப் பட்டது.

| | | |
|---|---|---|
| | **<u>பொருள் எண்: 26</u>**<br>இந்நகராட்சி வார்டு எண்.19 முதல் 36 வரையிலான வார்டுகளில் உள்ள மின்மோட்டார் அறைகளில் உள்ள மோட்டார்கள், பொதுகழிப்பிடங்கள், சமுதாய கழிப்பிடங்களிலுள்ள மோட்டார்கள், ஆழ்துளை கிணறு மோட்டார் பழுது சரிசெய்யும் பணி அமைக்கும் பணிக்கு ரூ.5.60 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தனி அலுவலர் அவர்களால் 31.07.2019ல் மன்ற எண்.3692 நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு 20.08.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்.<br>1) திரு.H.முகமது இப்ராஹிம் .. மதிப்பீட்டைவிட (–) 0.03% குறைவு<br>2) திரு.V.சத்யசீலன் .. மதிப்பீட்டைவிட (+) 0.20% அதிகம்<br>வரப்பெற்றுள்ள 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட (–) 0.03% குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்தக்காரர் திரு.H.முகமது இப்ராஹிம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>:-** 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 3552/2019/இ1) | தீர்மான எண்.3722 அனுமதிக்கப் பட்டது. |
| | **<u>பொருள் எண்: 27</u>**<br>இந்நகராட்சி வார்டு எண்.1 முதல் 18வரையிலான வார்டுகளில் உள்ள மின்மோட்டார் அறைகளில் உள்ள மோட்டார்கள், பொதுகழிப்பிடங்கள், சமுதாய கழிப்பிடங்களிலுள்ள மோட்டார்கள், ஆழ்துளை கிணறு பழுது சரிசெய்யும் பணி அமைக்கும் பணிக்கு ரூ.5.30 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தனி அலுவலர் அவர்களால் 31.07.2019ல் மன்ற எண்.3695 நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு 20.08.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம். | தீர்மான எண்.3723 அனுமதிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | 1) திரு.H.முகமது இப்ராஹிம் .. மதிப்பீட்டைவிட (–) 0.03% குறைவு<br>2) திரு.V.சத்யசீலன் .. மதிப்பீட்டைவிட (+) 0.20% அதிகம்<br>வரப்பெற்றுள்ள 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட (–) 0.03% குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்தக்காரர் திரு.H.முகமது இப்ராஹிம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>:-** 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 3552/2019/இ1) | |
| | **<u>பொருள் எண்: 28</u>**<br>இந்நகராட்சிக்குட்பட்ட பொதுசுகாதார பிரிவு–4 கிழக்கு சாலையிலுள்ள நுண்உர செயலாக்க மையம் மற்றும் பிரிவு–2 புதுக்கிராமத்தில் அமைந்துள்ள நுண்உர செயலாக்க மையத்தில் புதிதாக 2 எண்ணம் Shredder Mechine பொருத்தும் பணிக்கு ரூ.3.14 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தனி அலுவலர் அவர்களால் 31.07.2019ல் மன்ற எண்.3659 நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு 20.08.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்.<br>1)Ham Industrial Solutions .. மதிப்பீட்டைவிட (–) 0.65 % கு<br>2) OM Vinayaga Tools .. மதிப்பீட்டைவிட (+) 0.65 % அதி<br>வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட (–) 0.65% குறைவாக வழஙகியுள்ள ஒப்பந்தக்காரர் Ham Industrial Solutions அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>:-**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) ஆணையாளர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 7656/2019/இ1) | தீர்மான எண்.3724 அனுமதிக்கப் பட்டது. |
| | **<u>பொருள் எண்: 29</u>**<br>தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவன இயக்குநர், கோயம்புத்தூர் அவர்களின் ந.க.எண்.648/2019/A2 நாள்:30.07.2019ன்படி 2019–2020ம் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய நகராட்சி பஙகுத் தொகை ரூ.1,50,000/– (ஒரு லட்சத்து ஐம்பதாயிரம்) செலுத்த கோரி கடிதம் வரப்பெற்றுள்ளது. ஆகையால் மேற்படி தொகையினை தமிழ்நாடு பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை செலுத்தியதற்கு மன்றம் அஙகீகரிக்கலாம்.<br>ந.க.எண்.2915/2002/சி1 | தீர்மான எண்.3725 அனுமதிக்கப் பட்டது. |
| | **<u>பொருள் எண்: 30</u>**<br>இந்நகராட்சிக்குட்பட்ட பழைய நகராட்சி அலுவலக கட்டிடத்தில் பொருத்தப்பட்டுள்ள ஜெனரேட்டர் மற்றும் ஷெட்டினை கழற்றி புதிய அலுவலகத்தில் கான்கிரீட் பெட் அமைத்து பொருத்துவதற்கும், லாக்கரை கழற்றி புதிய அலுவலகத்தில் | தீர்மான எண்.3726 அனுமதிக்கப் பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | பொருத்துவதற்கும் அமைக்கும் பணிக்கு ரூ.0.75லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தனிஅலுவலர் அவர்களால் 30.05.2019ல் மன்ற எண்.3604 நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு 22.08.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்.<br>1) திரு.V. கிருஷ்ணமூர்த்தி .. மதிப்பீட்டைவிட (–) 0.05% குறைவு<br>2) திரு.H. முகமது இப்ராஹிம் .. மதிப்பீட்டைவிட (+) 0.14% அதிகம்<br>வரப்பெற்றுள்ள 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட(–)0.05% குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்தக்காரர் திரு.V.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>:-** 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 3560/2019/இ1) | |
| | **<u>பொருள் எண்: 31</u>**<br>இந்நகராட்சி வார்டு எண்.27, வீரவாஞ்சிநகர் 3வதுதெருவில் புதிய கான்கிரீட் பேவர் கல்தள சாலை அமைக்கும் பணிக்கு ரூ.24.00லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தனிஅலுவலர் அவர்களால் 31.07.2019ல் மன்ற எண்.3685 நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு 22.08.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்.<br>1) திரு.V. கிருஷ்ணமூர்த்தி .. மதிப்பீட்டைவிட (–) 0.05% குறைவு<br>2) திரு.H. முகமது இப்ராஹிம் .. மதிப்பீட்டைவிட (+) 0.14% அதிகம்<br>வரப்பெற்றுள்ள 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட(–)0.05% குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்தக்காரர் திரு.V.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>:-** 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 3560/2019/இ1) | தீர்மான எண்.3727 அனுமதிக்கப் பட்டது. |
| | **<u>பொருள் எண்: 32</u>**<br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3, நடராஜபுரம் மேற்குத்தெரு சுண்ணாம்பு களவாசல் அருகில் உள்ள தெருவில் வாறுகால் இரயில்வே தண்டவாளம் அருகே இருப்பதினால் அந்த வாறுகாலின் அருகே Chamber வடிவில் அமைத்திட உத்தேச மதிப்பீட்டுச் செலவினம் ரூ.0.85 இலட்சத்திற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>:-** மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 4869/2019/இ1) | தீர்மான எண்.3728 அனுமதிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | **பொருள் எண்: 33**<br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவிற்குத் தேவையான பிறப்பு, இறப்பு பதிவு, தொற்று நோய் தடுப்பு பணிகள், திடக்கழிவு மேலாண்மை மற்றும் தூய்மை இந்தியா திட்டப் பணிகளுக்குத் தேவையான படிவங்கள், பதிவேடுகள் அச்சிடுவதற்கும் மற்றும் நோட்டு புத்தகங்கள் வாஙகுவதற்கும், உத்தேச செலவினத் தொகை ரூ.4.00லட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.3661, நாள்: 31.07.2019ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்போது வரப்பெற்றுள்ள விலைப்புள்ளி அடிப்படையிலும், GST வரி 18% உட்பட மொத்த செலவினத் தொகை ரூ.762927.48/—ஆகும். ஆகவே மீதமுள்ள தொகை ரூ.362927/—க்கு மன்ற அங்கீகாரம் கோரப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொதுசுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மைப் பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழஙகியதை மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண். 4358/2019/எச்1) | தீர்மான எண்.3729 அனுமதிக்கப் பட்டது. |
| | **பொருள் எண்: 34**<br>இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் துப்புரவு பணிகளுக்கு தேவையான தளவாடச்சாமான்கள் வாஙகுவதற்கான உத்தேசத் தொகை ரூ.6,00,000/—க்கும் இந்நகர்மன்ற தீர்மான எண்.3638ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. தற்போது வரப்பெற்றுள்ள குறைவான விலைப்புள்ளியின் அடிப்படையிலும், GST 18% உட்பட மொத்த செலவினத் தொகை ரூ.986338/—ஆகும். ஆகவே கூடுதல் செலவினத் தொகை ரூ.386338/—க்கு மன்றம் அஙகீகாரம் கோரப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழஙகியதை மன்றம் அஙகீகரிக்கலாம்.<br>(ந.க.எண். 3659/2019/எச்1) | தீர்மான எண்.3730 அனுமதிக்கப் பட்டது. |
| | **பொருள் எண்: 35**<br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5, சஙகரலிஙகபுரம் மயான சாலையிலுள்ள 8வதுதெருவில் உள்ள சிறுபாலம் மற்றும் வேலாயுதபுரம் 3வதுதெருவில் உள்ள சிறுபாலம் பழுதடைந்துள்ளதால் புதிய சிறுபாலம் அமைக்க உத்தேச மதிப்பீட்டுச் செலவினம் ரூ.1.00/—லட்சத்திற்கு மன்றத்தின் அஙகீகாரம் வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 4869/2019/இ1) | தீர்மான எண்.3731 அனுமதிக்கப் பட்டது. |
| | **பொருள் எண்: 36**<br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு TN69R4954 வாகனத்திற்கு 06.09.2019ல் தகுதி சான்று காலம் முடிவடைவதால், தகுதி சான்று பெற வாகனத்திலுள்ள பழுதுகளை சரிசெய்ய உத்தேச செலவினத் தொகை ரூ.1,40,000/—க்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>1. 4 வீல் கீரிஸ்பேக்கிங செய்து பேரிங மாற்றம் செய்தல். | தீர்மான எண்.3732 அனுமதிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | 2. ஸ்பேரிஸ் பாக்ஸ் ஓவராயிலிங செய்து பேரிங மாற்றம் செய்தல்<br>3. பிளாட்பாம் கம்ளிட் புதிய மாற்றம் செய்தல்.<br>4. ஷேட்லைட் மாற்றம் செய்து கட்அவுட்டு புதியது மாற்றம் செய்து கம்ளிட் செக்கப் செய்தல்.<br>5. ஜாய்ன்ட் ஸ்டார் மாற்றம் செய்து செக்கப் செய்தல்.<br>6. பிரேக் ஏர்லீக் பார்த்து சரி செய்தல்.<br>7. 4 பட்டை விரைப்பு அடித்தல்.<br>8. கம்ளிட் பெயிண்டிங செய்தல்<br>9. ஹைட்ராலிக் லீக் சரிசெய்து தரப்படும்.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**:-<br>(அ) செலவினத் தொகைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண்.4664/2019/எச்1 | |
| | **<u>பொருள் எண்: 37</u>**<br>இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்த திரு.கருப்பசாமி/சின்னசாமி என்பவர் சுயவிருப்ப ஓய்வில் 31.12.2017ம் தேதியன்று ஓய்வு பெற்றார். அவருக்கு வழஙகப்பட வேண்டிய சிறப்பு சேமநலநிதி மற்றும் அரசு மானியத் தொகை ரூ.10,000/— வழஙக மன்றத்தின் அனுமதிக்காக வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண். 1286/2016/எச்1) | தீர்மான எண்.3733 அனுமதிக்கப் பட்டது. |
| | **<u>பொருள் எண்: 38</u>**<br>இந்நகராட்சியில் செயல்படுத்தப்பட்ட குடிநீர் அபிவிருத்தி திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 11.05.2018 அன்று துவக்கி வைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. மேற்கண்ட துவக்கவிழா நிகழ்ச்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அரசு செயல்படுத்தப்பட்டு வரும் திட்டஙகள் மற்றும் பைப்லைன் திட்டம் குறித்து பொதுமக்கள் பயன்பெறும் வகையில் புகைப்படக் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது. புகைப்படக் கண்காட்சி அமைக்க பிரிண்ட் செய்யப்பட்ட பிளக்ஸ் பேனர்களுக்கான செலவுத்தொகை ரூ.22,440/—ஐ R.K.Digital Kovilpatti என்ற நிறுவனத்திற்கு வழஙகிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u>:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 3549/2019/இ1) | தீர்மான எண்.3734 அனுமதிக்கப் பட்டது. |
| | **<u>பொருள் எண்: 39</u>**<br>இந்நகராட்சிக்குட்பட்ட காந்திநகர் உயர்நிலைப்பள்ளியில் பேவர்பிளாக்தளம், Smart Class room, குளிர்சாதன வசதி, ஆசிரியர்களுக்கு மடிக்கணினி வசதி செய்ய உத்தேச மதிப்பீட்டுச் செலவினம் ரூ.24.00 லட்சத்திற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u>:- மன்றம் இப்பணியை கல்வி நிதியின் கீழ் செய்ய அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 3552/2019/இ1) | தீர்மான எண்.3735 அனுமதிக்கப் பட்டது. |
| | **<u>பொருள் எண்: 40</u>**<br>இந்நகராட்சி பராமரிப்பிலுள்ள பவர் டில்லர் வாகனம் TAC 1007ற்கான தகுதிச்சான்று முடிவடைவதால் புதிய தகுதிச்சான்று பெரும்பொருட்டு மேற்கண்ட பணிகளை செய்வதற்கு உத்தேச மதிப்பீட்டுச் செலவினம் ரூ.25,000/—க்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 1101/2018/இ1) | தீர்மான எண்.3736 அனுமதிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | **<u>பொருள் எண்: 41</u>**<br>கோவில்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.28, வெங்கடேஷ் நகரிலுள்ள அறிவியல் பூங்கா மற்றும் வார்டு எண்.29, ஸ்ரீராம்நகரில் அமைக்கப்பட்டுள்ள பூங்கா ஆகிய பூங்காக்களை நகராட்சி மூலம் பராமரிப்பதற்கு போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் விலை விகிதத்தின்படி ஒரு பூங்காவிற்கு இரண்டு நபர்கள் வீதம் இரண்டு பூங்காக்களுக்கு நான்கு நபர்களை வைத்து ஓராண்டு காலத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள உத்தேச மதிப்பீட்டுச் செலவினம் ரூ.4.50/—இலட்சத்திற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>:-** மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 4869/2019/இ1) | தீர்மான எண்.3737 அனுமதிக்கப் பட்டது. |
| | **<u>பொருள் எண்: 42</u>**<br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2, ஜீவாதெரு, வார்டுஎண்.4, காந்தி அறுவைமில், வார்டு—17, பள்ளிவாசல்தெரு, வார்டுஎண்.15, புதுரோடு மற்றும் வார்டு எண்.7, எம்.ஜி.ஆர்.நகரில் உள்ள பயன்படுத்த முடியாத மற்றும் இடிந்த நிலையிலுள்ள மோட்டார் அறையினை இடித்து அப்புறப்படுத்துவதற்கு அதற்கான உத்தேச மதிப்பீட்டுச் செலவினம் ரூ.0.55 லட்சத்திற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>:-** மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 4869/2019/இ1) | தீர்மான எண்.3738 அனுமதிக்கப் பட்டது. |
| | **<u>பொருள் எண்: 43</u>**<br>கோவில்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள தெருவிளக்குகளை பராமரிப்பு பணி செய்து வரும் ஸ்ரீகங்கா எலக்ட்ரிக்கல்ஸ், திருநெல்வேலி என்ற நிறுவனத்தின் பராமரிப்பு நீட்டிப்பு பணிக்காலம் 30.09.2019ம் தேதியுடன் முடிவடைவதால் தெருவிளக்கு பராமரிப்பு அவசியம் கருதி தற்போது பராமரிப்பு பணி மேற்கொள்ளும் ஸ்ரீகங்கா எலக்ட்ரிக்கல்ஸ், திருநெல்வேலி என்ற நிறுவனத்தின் 04.09.2019ம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளவாறு பராமரிப்பு பணி காலத்தை அதே விலை விகிதத்தில் மேலும் 01.10.2019 முதல் 31.12.2019வரை நீட்டிப்பு செய்து கொள்வதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>:-** மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 8732/2014/இ1) | தீர்மான எண்.3739 அனுமதிக்கப் பட்டது. |
| | **<u>பொருள் எண்: 44</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.28, வெங்கடேஷ்நகர் அறிவியல் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள உபகரணங்கள் மற்றும் பூங்காவை முறையாக பராமரிக்கும் பொருட்டு பூங்காவிற்கு வரும் சிறுவர்கள் மற்றும் பெரியவர்களிடம் முறையே சிறுவர்களுக்கு ரூ.5/—ம் பெரியவர்களுக்கு ரூ.10/—ம் நகராட்சி பணியாளர்களை கொண்டு வசூல் செய்வதற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>:-** மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 3558/2019/இ1) | தீர்மான எண்.3740 அனுமதிக்கப் பட்டது. |